**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, BOOTHAPANDY**
**STC.No. 496/2022**
**WITNESS: LW.7/PW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மாரிசெல்வன் | வயது : | 39/2026 |
| தகப்பனார் பெயர்: | செல்வராஜ் | தாலுகா: | தென்காசி |
| கிராமம்: | திருமாலப்புரம் | தொழில்: | உதவி ஆய்வாளர் |
| Solemnly affirmed by Thiru. Sajith J.K. Castro, Assistant of this Court in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) 10th day of July 2026. | | | |
| **As per the circular of the Hon'ble High Court, Madras in R.O.C.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with his / her identity card. Aathar Card of the Witness verified** | | | |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகர்கோவில் உட்கோட்ட தனிப்பிரிவு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு பூதப்பாண்டி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 22.10.2020 அன்று பணியில் இருந்த தலைமைக்காவலர் குமார் என்பவர் பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்து பூதப்பாண்டி காவல்நிலைய குற்ற எண் 386/2020 சட்டப்பிரிவுகள் 294(b), 506(i) of IPC வழக்கை நான்எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 11.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் பார்வையிட்டு சாட்சிகள் விணு மற்றும் ஸ்டிபன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். பின்பு அவர்களை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன். பின்பு இவ்வழக்கின் புகார்தாரர் கோபாலன் மற்றும் சம்பவத்தை நேரில்

பார்த்த சாட்சிகளான வில்சன் மற்றும் கிறிஸ்டோபர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்தும், சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும் எனது விசாரணையிலும் இவ்வழக்கின் எதிரி வாதியை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி கொலைமிரட்டல் விடுத்த சம்பவம் உண்மை என தெரிய வந்தது. பின்பு இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி நாகர்கோவில் மாவட்ட அமர்வு நீதிமன்ற உத்தரவுபடி நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். பின்பு இவ்வழக்கின் எதிரி மீது 294(b), 506(i) of IPC ன் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **மாதிரிவரைப்படம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ நாள் எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும் 18.10.2020 காலை 11.00 மணி. புகார் அளித்தது 22.10.2020 காலை 10.30 மணி. மேற்படி காலத்தாமதத்திற்கான காரணம் எனது விசாரணையில் துலங்குமா என்றால் புகார் மனுவில் அவரே தெளிவாக குறிப்பிட்டுள்ளார். என்ன காரணம் என்றால் மன உளைச்சல் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். புகார்தாரருக்கு மகனோ, மகளோ இருப்பதாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் இல்லை. புகார்தாரர் மனஉளைச்சலில் இருந்தாலும் அவரது மகனோ, மகளோ உடனடியாக புகார் அளித்திருக்கலாம் நான் வழக்கிற்காக பொயய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும்,காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 08.00 கி.மீ. சம்பவ இடத்திலிருந்து, காவல் நிலையத்தை அடைய எவ்வளவு நேரம் ஆகும்

என்றால் சுமார் 1/2 மணி நேரம். அ.சா. 4 ல் பதிவு செய்த நாள் மற்றும் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல , குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை எனது விசாரணைக்கு எடுக்கப்பட்ட நேரம் என்னவென்றால் காலை 11.00 மணி. விசாரணை தொடங்கப்பட்ட நேரம் என்னவென்றால் காலை 11.30 மணி. அ.சா.ஆ 1 ல் எதிர் மனுதாரருக்கும், எனக்கும் இடபிரச்சனை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது மேற்படி பிரச்சனை குறித்து விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் உண்மையில் சம்பவ இடம் சென்றிந்தால் மேற்படி இட பிரச்சனை குறித்து விசாரணை செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ 1 ல் , அ.சா 1 குறிப்பாக எந்த இடத்தில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவரது வீட்டில். குற்றம் சாட்டப்பட்ட நபர் குறிப்பாக எந்த இடத்தில் நின்று பேசினார் என்று அ.சா.ஆ 1 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். உண்மையாக சம்பவம் நடைபெற்று இருந்தால் மேற்படி இடத்தை குறிப்பிட்டு இருப்பார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் இடம், பொது இடம் என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும். அருகில் கடைகள் உள்ளன. புகார்தாரர் வீட்டினுள் இருந்தாரா அல்லது வெளியே நின்றாரா என்று அ.சா.ஆ 1 ல் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் சாட்சியாக சேர்த்த நபர்கள் சம்பவ இடத்தின் அருகில் உள்ளவர்களா என்று எனது விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் சென்று விசாரணை செய்திருந்தால் நான் சாட்சியாக சம்பவ இடத்தின் அருகில் உள்ள நபர்களை சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. சாட்சி பட்டியலில் உள்ள கண்ணுற்ற சாட்சியாக போடப்பட்டிருக்கும் நபர்கள் சம்பவ இடத்தின் அருகில் வசிக்கும் நபர்களா என்ற விபரம் எனது விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். குற்றம் சாட்ட நபர்

தான் பேசி உள்ளார்கள் என்ற விவரம் எனது விசாரணையில் துலங்குமா என்றால் சாட்சிகள் குறிப்பிட்டுள்ளார்கள். அ.சா.ஆ 1 ல் செல்போனில் பேசிய போது மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது யாரிடம் செல்போனில் பேசினார் என்ற விவரம் எனது விசாரணையில் துலங்குமா என்றால் இல்லை. நான் கூறியவாறு , கூறிய நேரத்தில் விசாரணை செய்யவில்லை, நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறு விசாரணை இல்லை)